# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 17 செவ்வாய்க்கிழமை 01.07.2025 கதிர் 241









## வாக்குறுதிகளை மீறித் தொடர்ச்சியாக மக்களை ஏமாற்றி வருகின்றது அநுரவின் திசைகாட்டி அரசு

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 01

"அநுர தலைமையிலான திசைகாட்டி அரசு வாக்குறுதிகளை மீறித் தொடர்ச்சியாக மக்களை ஏமாற்றி வருகின்றது. தற்போது இந்த அரசுக்கு ஏமாற்றே மிஞ்சிப்போயுள்ளது."

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு இன்று விசேட கூற்றை முன்வைத்து கருத்துத்

7➤

# வடக்கு, தெற்கில் இனவாதம் மீண்டும் தலைதூக்க ஒருபோதும் அனுமதியேன்

### சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் அனைவரும் ஒற்றுமையாக வாழும் சமூகத்தை உருவாக்குவதே தனது இலக்கு என்கிறார் அநுர



கொழும்பு, ஜூலை 01

வடக்கிலும் தெற்கிலும் இனவாதம் மீண்டும் தலைதூக்க ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க திட்டவட்டமாக அறிவித்தார்.

இலங்கை ராமான்ய மகா பீடத்தின் 74 ஆவது உபசம்பதா மஹோத்சவத்தின் தொடக்க விழாவில் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

சில அரசியல் குழுக்கள் அதிகாரத்தைக் கைப்பற்ற இனவாதத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தியதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதன் ஊடாக அரசியல்வாதிகளன்றி வடக்கிலும் தெற்கிலும் உள்ள அப்பாவி பெற்றோர்களின் பிள்ளைகளே பலியானதாகவும் தெரிவித்தார்.

7➤

## மீண்டும் சிறையில் அடைத்தால் மீண்டும் நூல்களை எழுதுவேன்



### விமல் கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 01

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு வாக்குமூலம் ஒன்றைப் பதிவு செய்வதற்காகத் தனக்கு அழைப்பாணை விடுத்துள்ளது என்று முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

7➤

## போதைப்பொருள் கடத்தல் தகராறு: இளைஞர் ஒருவர் சுட்டுக்கொலை!



கொழும்பு, ஜூலை 01

இரத்தினபுரி மாவட்டம், கஹவத்த, யாயின்ன பகுதியில் நேற்று திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில்

7➤

## ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் நிஷாந்தவுக்கு ஜூலை 15 ஆம் திகதி வரை மறியல் நீடிப்பு



கொழும்பு, ஜூலை 01

ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் நிஷாந்த விக்கிரமசிங்கவை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் இன்று செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிஷாந்த விக்கிரமசிங்க கொழும்பு பிரதான நீதிவான் தனுஜா லக்மாலி முன்னிலையில் இன்று ஆஜர்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

7➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# தந்தை செல்வாவின் சிலை திறப்பு





மன்னார், ஜூலை 01

மன்னார் நகரில்அமைந்திருந்த தந்தைசெல்வாவின் உருவச்சிலை கடந்த வாரம் இனம் தெரியாத நபர்களினால் உடைக்கப்பட்ட நிலையில் குறித்த உருவச்சிலை இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் கிளையின் ஏற்பாட்டில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு செவ்வாய்க்கிழமை (1) அன்று காலை 10.30 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் கிளையின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் மத தலைவர்கள், இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் கிளை தலைவர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ்நிர்மலநாதன், கட்சியின் உறுப்பினர்கள்,மன்னார் நகரசபையின் முன்னாள் தவிசாளர் ஞானப்பிரகாசம் அன்ரனிடேவிட்சன்,நகரசபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இதன் போது அஞ்சலி செலுத்தப்பட்ட பின்னர் மத தலைவர்கள்,கட்சியின் முக்கியஸ்தர்கள், மன்னார் நகரசபையின் முன்னாள் தவிசாளர் ஞானப்பிரகாசம் அன்ரனிடேவிட்சன் ஆகியோர் மாலைஅணிவித்து மரியாதை செலுத்தினர்.

மன்னார் நகரமத்தியில் மாவட்டச் செயலகத்திற்கு முன் அமைக்கப்பட்டிருந்த தந்தை செல்வாவின் சிலைகடந்த புதன்கிழமை (25) அதிகாலை இனம் தெரியாத நபர்களினால் உடைக்கப்பட்டுள்ளது.

தந்தை செல்வாவின் சிலைஉடைக்கப்பட்ட சம்பவம் குறித்து இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் கிளை முக்கியஸ்தர்கள் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தநிலையில் சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

தந்தை செல்வாவின் உருவச்சிலையில் காணப்பட்ட அவரது தலை முழுமையாக அகற்றப்பட்ட நிலையில் அவரது சிலைக்கு அருகில் இருந்து தலைப்பாகம் மீட்கப்பட்டுள்ளது.

சிலை உடைப்பு சம்பவத்தை தொடர்ந்து மன்னார் பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளுக்கு அமைவாக குறித்த சம்பவத்துடன் தொடர்புடையதாக கருதப்படும் ஒருவர் கைதுசெய்யப்பட்ட நிலையில் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.




# "இன்று முதல் சீட் பெல்ட் அணிவது கட்டாயம்"



கொழும்பு, ஜூலை 01

தேசிய போக்குவரத்து ஆணையம் (வேஊ) இன்று செவ்வாய்க்கிழமை முதல் பேருந்து ஓட்டுநர்கள் சீட் பெல்ட் அணிவது கட்டாயம் என்று அறிவித்துள்ளது என்று தேசிய போக்குவரத்து ஆணையத்தின் இயக்குநர் ஜெனரல் நயோமி ஜெயவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் டெய்லி மிர்ர் ஊடகத்திற்கு பேசிய ஜெயவர்தன, மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் விதிகளின் கீழ் பேருந்து ஓட்டுநர்களுக்கு சீட் பெல்ட் கட்டாயமாக்கும் வர்த்தமானி அறிவிப்பு 2001இல் வெளியிடப்பட்ட போதிலும், அது பல ஆண்டுகளாக முறையாக அமுல்படுத்தப்படவில்லை என்று கூறினார்.

கடந்த காலங்களில் இந்த விதிமுறையை ஓட்டுநர்கள் பின்பற்றத் தவறியதால் பேருந்துகள் சம்பந்தப்பட்ட சாலை விபத்துகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு பதிவாகியுள்ளது.

இதனைக்கருத்தில்கொண்டு, பேருந்து ஓட்டுநர்களுக்கான கட்டாய சீட் பெல்ட் சட்டம் இன்று முதல் மீண்டும் செயல்படுத்தப்படும், மேலும் அதை மீறுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்," என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையில், பேருந்துகள் மற்றும் முச்சக்கர வண்டிகள் உள்ளிட்ட வாகனங்களிலிருந்து பாதுகாப்பற்ற பாகங்கள் மற்றும் மாற்றங்களை அகற்றும் நடவடிக்கைகளும் இன்று முதல் மீண்டும் தொடங்கும் என்று போலீசார் உறுதிப்படுத்தினர்.

மோட்டார் போக்குவரத்துத் துறையின் சமீபத்திய ஆய்வில், கடந்த ஆண்டு 8,788 வாகனங்கள் வீதிக்குப் பொருத்தமற்றவை என அடையாளம் காணப்பட்டன.

அதே நேரத்தில், வாகனங்களில் அங்கீகரிக்கப்படாத கூடுதல் பாகங்களை நிறுவுவது போக்குவரத்து விபத்துகளுக்கு பங்களிக்கும் முக்கிய காரணியாக எடுத்துக்காட்டப்பட்டது.

சுற்றறிக்கைகள் மூலம் ஒப்புதல் பெற்ற பேருந்துகள் மற்றும் முச்சக்கர வண்டிகளில் கூடுதல் அலங்கார பாகங்கள் அவ்வப்போது அனுமதிக்கப்பட்டிருந்தாலும், அத்தகைய மாற்றங்கள் நிறுவப்பட்ட பாதுகாப்பு அளவுகோல்களுக்கு கண்டிப்பாக இணங்க வேண்டும் என்று அதிகாரிகள் வலியுறுத்தினர்.

வீதி பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான புதுப்பிக்கப்பட்ட முயற்சிகளின் ஒரு பகுதியாக, பாதுகாப்பற்ற மாற்றங்களை அகற்றுவதற்கு பேருந்து உரிமையாளர் சங்கங்கள் மற்றும் முச்சக்கர வண்டி சங்கங்கள் இரண்டும் தங்கள் ஆதரவைத் தெரிவித்துள்ளன. (ஐ)

# கட்டாக்காலி மாடுகள் போக்குவரத்துக்கு இடைஞ்சல்



கல்முனை , ஜூலை 01

கட்டாக்காலி மாடுகள் தினமும் வீதியில் ஆக்கிரமிப்பதால் பொதுப் போக்குவரத்து பெரும் சிரமம் ஏற்படுவதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பிரதான வீதிகளில் பகல் இரவு பாராது ஆக்கிரமித்துள்ள கட்டாக்காலி மாடுகள் தினமும் பொது போக்குவரத்திற்கு தடை ஏற்படுத்தும் வகையில் நடமாடி வருகின்றன.

இப்பகுதியில் உள்ள அரச தனியார் நிறுவனங்களுக்கு முன்பாக தினமும் சஞ்சாரம் செய்வதுடன் அப்பகுதிகளை சுகாதார சீர்கேடான இடங்களாக மாற்றுவதுடன் அப்பகுதியில் துர்நாற்றமும் ஏற்படுகின்றது.

மேலும் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையம்,கல்முனை மாநகர சபை,கல்முனை பிராந்திய சுகாதார பணிமனை, கல்முனை பிரதான பேருந்து தரிப்பிடம், இலங்கை மின்சார சபை ,கல்முனை பிரதேச செயலகம் ,வங்கிகள் ,உள்ளிட்ட பகுதிகளில் இரவு வேளையில் கட்டாக்காலி மாடுகள் நாய்கள் நடமாடுவதுடன் சேதங்களையும் ஏற்படுத்தி வருகின்றன.

வீதிகளில் இரவு வேளையில் நடமாடித்திரியும் சுமார் 25 க்கும் மேற்பட்ட கட்டாக்காலி மாடுகள் மாலை நேரம் மற்றும் இரவு நேரங்களில் கூட்டம் கூட்டமாக அலைந்து திரிகின்றன. இதனால் வீதிப் போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைந்து வருவதுடன் வீதி விபத்துக்களும் இடம் பெறுவதற்கு காரணமாக அமைகின்றது

இவ்வாறான கட்டாக்காலி மாடுகளினால் ஏற்படும் போக்குவரத்து இடைஞ்சல் விபத்துகளை குறைக்கும் வகையிலும் கடந்த காலங்களில் கல்முனை மாநகர சபை மற்றும் பொலிஸார் முன்னெடுத்த போதிலும் தற்போது இவ்வாறு மேற்கொள்ளமையினால் பிரதான வீதிகள் மற்றும் குறுக்கு வீதிகளில் மாடுகள் படுத்துறங்குவது நிற்பது போன்றவற்றினால் பொதுமக்களும் வாகன சாரதிகளும் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் வீதி போக்குவரத்துக்கு இடையூறாக காணப்படுகின்ற இவ்வாறான கட்டாகாலி மாடுகளை கல்முனை மாநகர சபை அதிகாரங்களைக் கொண்டு ஏன் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

மாநகர சபையினால் கடந்த காலங்களில் போக்குவரத்துக்கு இடையூறாக காணப்பட்ட கட்டக்காலி மாடுகளை பொலிஸாருடன் இணைந்து பிடித்ததை போன்று எதிர்காலத்தில் பிடித்து கட்டாக்காலி மாடுகளினால் அன்றாடம் ஏற்படுகின்ற வீதி விபத்துக்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

முன்னர் 1987ஆம் ஆண்டு15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் மாநகர பகுதியில் போக்குவரத்துக்கு இடையூறாக திரியும் கட்டக்காலி மாடுகள் கடந்த காலங்களில் பிடிக்கப்பட்டு தண்டம் அறவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ள ஒரே ஆசிய நாடு இலங்கை

கொழும்பு, ஜூலை 01

உலகளாவிய வரி தொடர்பாக அமெரிக்காவுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ள ஒரே ஆசிய நாடு இலங்கை என்று பொருளாதார அபிவிருத்தி துணை அமைச்சர் அனில் ஜெயந்த தெரிவித்தார்.

அரசாங்கத்தின் நிதி மூலோபாயம் குறித்த நாடாளுமன்ற விவாதத்தின் போது பேசிய ஜெயந்த, இந்த ஆண்டு தொடக்கத்தில் விதிக்கப்பட்ட 44% வரி தொடர்பாக அமெரிக்காவுடன் மிகவும் சாதகமான ஒப்பந்தத்தைப் பெற அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது என்றார்.

அமெரிக்க வர்த்தக பிரதிநிதி அலுவலகத்தின் அழைப்பைத் தொடர்ந்து, இலங்கை தூதுக்குழு கடந்த மாதம் வொஷிங்டன், டி.சி.க்கு விஜயம் செய்தது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் அறிமுகப்படுத்திய தொடர்ச்சியான பரஸ்பர நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக இந்த வரி 90 நாட்களுக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இலங்கைக்கு சமீபத்தில் விஜயம் செய்தபோது, சர்வதேச நாணய நிதியத்தின் துணை நிர்வாக பணிப்பாளர் கீதா கோபிநாத், வரி பேச்சுவார்த்தைகளில் அரசாங்கம் காட்டிய பாராட்டத்தக்க முன்னேற்றத்தை ஒப்புக்கொண்டார், ஆனால் அவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார், இலங்கையின் ஏற்றுமதியில் அமெரிக்கா 25% பங்களிப்பைக் கொண்டுள்ளது என்பதைக் குறிப்பிட்டார். (ஐ)

# லாஃப்ஸ் எரிவாயு விலையில் எந்த மாற்றமும் இல்லை



2025ஜூலைமாதத்துக்கான லாஃப்ஸ் எரிவாயு விலையில் எந்த மாற்றமும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை லாஃப்ஸ் எரிவாயு நிறுவனத்தின் பணிப்பாளர் நிரோஷன் ஜே.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தற்போது, லாப் சமையல் எரிவாயு 12.5 கிலோ சிலிண்டர் 4,100 ரூபாவிற்கும், 5 கிலோ சிலிண்டர் 1,645 ரூபாவிற்கும் விங்பனை செய்யப்படுகின்றது. (ஐ)

# லிட்ரோ எரிவாயு விலையில் மாற்றம் இல்லை



கொழும்பு, ஜூலை 01

ஜூலை மாதத்திற்கான உள்நாட்டு எரிவாயு விலையில் எந்த திருத்தமும் ஏற்படாது என்று லிட்ரோ கேஸ் லங்கா லிமிடெட் செவ்வாய்கிழமை (01) அன்று அறிவித்துள்ளது.

அதன்படி,

12.5 கிலோகிராம் உள்நாட்டு எரிவாயு சிலிண்டரின் விலை ரூ. 3,690 ஆகவும், 5 கிலோகிராம் எரிவாயு சிலிண்டரின் விலை ரூ. 1,482 ஆகவும் இருக்கும்.

2.3 கிலோகிராம் எரிவாயு சிலிண்டரின் விலை ரூ. 694 ஆகவும் மாறாமல் உள்ளது என்று நிறுவனம் உறுதிப்படுத்தியது.

நடைமுறையில் உள்ள எரிவாயு விலை நிர்ணய பொறிமுறையின் கீழ் நிறுவனத்தின் வழக்கமான மாதாந்திர விலை மதிப்பாய்வைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# மக்களை வீடு, வீடாக சென்று சந்திக்க உள்ளோம்: அமைச்சர் துரைமுருகன்



டிரெண்ட் மாறியதால் ஓரணியில் தமிழ்நாடு என்ற பிரசாரம் மூலம் மக்களை வீடு, வீடாக சென்று சந்திக்க உள்ளோம் என்று அமைச்சர் துரைமுருகன் கூறி உள்ளார்.

தி.மு.க., சார்பில் ஓரணியில் தமிழ்நாடு என்ற 45 நாள் பிரசாரத்தை அக்கட்சியின் தலைவரும், முதல்வருமான ஸ்டாலின் இன்று (ஜூலை 1) சென்னையில் தொடங்கி வைத்தார். அதற்கான வீடியோவை அவர் வெளியிட்டார்.

தொலைக்காட்சி வழியாக வேலூரில் இருந்தபடி பிரசாரம் தொடக்க விழாவை அமைச்சர் துரைமுருகன் பார்த்தார். பின்னர், பிரசாரத்தை தொடங்கி வைத்த அவர், நிருபர்களிடம் பேசுகையில் கூறியதாவது

ஓரணியில் தமிழ்நாடு என்ற புதிய சித்தாந்தத்தை முதல்வர் அறிவித்து இருக்கிறார். இந்த தலைப்பு பல்வேறு கோணங்களை உள்ளடக்கி இருக்கிறது. முதலில், பிரிந்திருக்கின்ற அல்லது ஒத்த கருத்துடையவர்கள் யார், யார் இருக்கிறார்களோ அவர்களை எல்லாம் சந்தித்து கொள்கை விளக்கங்களை தெரிவித்து இந்த அணியிலே சேர்க்க வேண்டும் என்பது இந்த தத்துவத்தின் முதல் பாகம்.

அதோடு மட்டும் அல்லாமல் ஏதோ ஒரு 4 பேரை கேட்டேன், 3 பேர் வர்றேன், ஒருவர் வரவில்லை என்று சொல்லிவிட்டு எழுதிவிட முடியாது. மற்றவர்களை கட்சியில் சேர்க்கிற போது, அவர்களிடம் வெறும் தி.மு.க., கோட்பாடுகளை மட்டும் சொன்னால் எடுபடாது.

ஆனால், தி.மு.க., வெறும் அரசியல் கட்சி அல்ல, அது ஒரு சமுதாய போராளி கட்சி. தமிழகத்தின் இனம்,மானம்,. மொழி, மரியாதை இவைகளை எல்லாம் கட்டிக்காக்கின்ற கட்சி. தமிழகம் யாருக்கும் இரண்டாம்தர மாநிலமாக போய்விடக்கூடாது என்பதில் அதிக அக்கறை உள்ள கட்சி.

ஆகையினால் மற்றவர்களை சந்திக்கும் போது, மொழி, மானம் காக்கிற பணியை நாங்கள் செய்கிறோம் என்பதை எடுத்துச் சொல்ல வேண்டும் என்பது முதல்வரின் கருத்திலே ஒன்று. ஒவ்வொரு குடும்பத்திலும் பிரசாரங்கள் இன்று மாறி போயிருக்கிறது. கொஞ்ச காலம் முன்பு ஒரு பொதுக்கூட்டம் என்று சொன்னால் ஆண்கள், பெண்கள் அடுக்கடுக்காக உட்கார்ந்து ஒரு பெருங்கூட்டத்தை 3 மணி நேரம் ரசிப்பார்கள்.

ஆனால் இன்றைக்கு அந்த மாதிரி டிரெண்ட் கிடையாது. எதையும் டிவியில் பார்த்துவிட்டு போய்விடலாம் என்ற நிலை இருக்கிறது. முன்பு எல்லாம் மைக் வைத்து பேசுவோம். ஆனால் இன்றெல்லாம் அப்படி அல்ல.

நேரிடையாக அந்தந்த குடும்பங்களை சந்தித்து, இந்த ஆட்சியின் நிலைமை, இந்த ஆட்சி 4 ஆண்டுகாலங்களில் என்னென்ன செய்திருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லி, எங்களின் ஆட்சியை கவிழ்க்க வேண்டும் என்பதற்காக அல்லது வருகிற தேர்தலில் தோற்கடிக்க வேண்டும் என்பதற்காக என்னென்ன வழிமுறைகளை எல்லாம் மாற்றுக் கட்சியினர் ஆதரிக்கின்றனர் என்பதை தனித்தனியாக எடுத்துச் சொல்ல வேண்டும்.

பொதுக்கூட்டத்தில் கேட்டால் பத்தோடு பதினொன்றாக போய் விடும். தனிமனிதனிடம் 5 நிமிடம், 10 நிமிடம் பேசினால் அவர்களுக்கு இந்த கட்சியின் மீது அதிக நாட்டம் ஏற்படும். எனவே வீடு, வீடாக போக வேண்டும் என்று தெரிவிக்கிறோம்.

மத்திய அரசானது, தமிழகத்திற்கு தரவேண்டிய மாநில நிதியை தராமல் அதற்கு எதிர்வினையாகவே செய்கிறது. கீழடி உங்களுக்கு தெரியும், அவர்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. மத்திய சர்க்காருக்கு தமிழகம் மீது எவ்வளவு வெறுப்பு இருக்கிறது.

இவற்றை எல்லாம் எதிர்க்க வேண்டும் என்றால் பிரிந்திருந்தால் நடக்காது,இணைந்து இருந்தால் தான் நடக்கும். அதனால் தான் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும் என்று முதல்வர் அறிவித்து இருக்கிறார்.

இவ்வாறு துரைமுருகன் பேசினார்.

அதன் பின்னர் நிருபர்களின் கேள்விகளுக்கு துரைமுருகன் பதிலளித்தார். அவர் பேசியதாவது

தமிழகத்தை காப்போம் என்று அ.தி.மு.க.,வின் பிரசாரத்தை பற்றி நாங்கள் என்ன சொல்வது? எதிர்க்கட்சியாக இருக்கிறவன், ஆளுங்கட்சியை பார்த்து எல்லாம் பிரமாதமாக இருக்கு? நல்லா இருக்கு என்றெல்லாம் சொல்வானா? நல்லாயிருந்தால் கூட நல்லாயில்லை என்றுதான் சொல்வான்.

வீடு, வீடாக சென்று மக்களை சந்திக்கும் போது அவர்கள் சொல்லும் குறைகளை கேட்போம். (ஐ)



## சிவகாசி அருகே பட்டாசு ஆலையில் பயங்கர வெடிவிபத்து: 6 பேர் உயிரிழப்பு

*சிவகாசி அருகே சின்ன காமன்பட்டியில் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட பயங்கர வெடி விபத்தில் 6 பேர் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.*

*விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகே சின்னகாமன்பட்டியில் பட்டாசு ஆலை ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்த ஆலையில் இன்று (ஜூலை 01) தொழிலாளர்கள் வழக்கம்போல் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது திடீரென பயங்கர வெடி விபத்து ஏற்பட்டது. இதில் 3 அறைகள் தரைமட்டமாகின.*

*தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்புபடையினர் நீண்ட நேரம் போராடி தீயை அணைத்தனர். இந்த வெடி விபத்தில் தொழிலாளர்கள் 6 பேர் உயிரிழந்தனர். மேலும் 4 பேர் பலத்த காயமடைந்துள்ளனர். இவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.*

*இதில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இதனால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது.*

*வெடி விபத்தில் உயிரிழந்தவர்களின் உடல் பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.*

*உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர் மருத்துவமனை முன்பு குவிந்தனர். விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடந்து வருகிறது. (ஐ)*

## ஹைதராபாத் ரசாயன தொழிற்சாலை தீ விபத்து: பலி 37 ஆக உயர்வு மேலும் அதிகரிக்க வாய்ப்பு

தெலுங்கானாவில் சங்கரெட்டி மாவட்டத்தின் பதஞ்சேரு பகுதியில் பாஷ்மிலராம் தொழிற்பேட்டை உள்ளது. இங்கு, ஷிகாச்சி ரசாயன தொழிற்சாலை இயங்கி வருகிறது.

இதில், 150க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் நேற்று பணியில் இருந்தனர். அப்போது தொழிற்சாலையில் இருந்த உலை ஒன்று பயங்கர சத்தத்துடன் வெடித்தது.

இதனால் அதிர்ச்சி அடைந்த தொழிலாளர்கள் பதறியபடி வெளியேறினர். எனினும், உலையின் அருகே இருந்த தொழிலாளர்கள் இந்த விபத்தில் சிக்கியது தெரிய வந்தது. தகவலறிந்து வந்த போலீசார், தீயணைப்பு மற்றும் மீட்புக்குழு உதவியுடன் உள்ளே இருந்தவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர்.

தொழிற்சாலையில் ஏற்பட்ட தீயை நீண்டநேரம் போராடி, தீயணைப்புப் படையினர் கட்டுக்குள் கொண்டு வந்தனர். இதையடுத்து, உள்ளே சிக்கிய தொழிலாளர்களை மீட்கும் பணியில் மீட்புக்குழுவினர் ஈடுபட்டனர். இந்த உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 37 ஆக உயர்ந்துள்ளது.

10க்கும் மேற்பட்டோர் பலத்த காயம் அடைந்து, மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இதனால் பலி எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. 2வது நாளாக தொடர்ந்து மீட்பு பணிகள் நடந்து வருகிறது.

இந்த வெடிவிபத்து குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து, விபத்திற்கான காரணம் பற்றி விசாரணை நடத்தி வருகின்றனர். (ஐ)



# வாழை இலையில் சாப்பாடு வியக்க வைக்கும் நன்மைகள்







நம் முன்னோர்கள், நோய் நொடி இன்றி ஆரோக்கியமாக நீண்ட காலம் வாழ்ந்தார்கள். அதற்கு காரணம் அவர்களது சிறந்த பழக்கவழக்கம் மற்றும் உணவு முறை. தமிழ் மக்களின் பாரம்பரிய நிகழ்வுகளோடு பின்னி பிணைந்திருக்கும் வாழை இலை சாப்பாடு, அதில் ஒன்று.

வாழை இலை சாப்பிடுவது, ஆரோக்கியத்திற்கு பல வகைகளை நம்மை அளிக்கக் கூடியது மருத்துவ குணம் நிறைந்த வாழை இலையில் சாப்பிடுவதால் பல உடல்நல பிரச்சனைகளில் இருந்து விடுபடலாம்.

வாழையின் தண்டு முதல் இலை வரை, அதன் பழம் காய், பூ என அனைத்தும் மருத்துவ குணங்கள் நிறைந்தது. வாழை இலையில் கால்சியம், மெக்னீசியம், பொட்டாசியம், சோடியம், தாமிரச்சத்து என சத்துக்கள் காணப்படுகின்றன.

வாழை இலையின் மேற்புறத்தில் குளோரோஃபில் என்ற பொருள் நிறைந்து இருப்பதால், சூடாக வாழை இலையில் போட்டு உணவு உண்ணும் போது, அதன் சத்துக்கள் உணவுடன் கலந்து நமக்கு ஆரோக்கியத்தையும் ஆயுளையும் கூட்டுகின்றன.

வாழை இலையில் சாப்பிடுவதால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கிறது. மேலும் வாழை இலையில் ஆன்ட்டி ஆக்சிடென்ட்கள் அதிக அளவில் காணப்படுவதால், செல் சிதைவு ஏற்படாமல் காத்து, முதுமை நம்மை அண்டாமல் தடுக்கிறது

வாழை இலையில் உள்ள குளோரோபில், வயிற்றுப் புண்களை ஆற்றும் தன்மை கொண்டது. தீ உங்களை ஆற்றும் சக்தி கூட வாழை இலைக்கு உண்டு. அல்சர் புண் ஆற்றும் திறன் கொண்ட வாழை இலை, புற்றுநோயை தடுக்கும் ஆற்றல் கொண்டது

ரத்தம் உறைவதை தடுக்கும் ஆற்றல் வாழை இலைக்கு உண்டு. எனவே பக்கவாதம் போன்ற இதய நோய்கள் வராமல் தடுக்க தினமும் வாழ இலையில் உணவு சாப்பிடலாம்.

வாழை இலையில் பேக் செய்யப்படும், காய்கள் பழங்கள், பூக்கள் போன்றவை சீக்கிரம் வாடி போகாமல் பசுமையாகவே இருக்கும். அதற்குக் காரணம் அதற்கு உன் குளிர்ச்சியான தன்மை, மற்றும் ஆக்சிஜனை வெளியிடும் தன்மை.

சிறுநீரகக் கற்கள் உருவாவதைத் தடுக்கும் ஆற்றல் உண்டு. அதோடு, சிறுநீர்ப்பை தொடர்பான நோய்களுக்கு நல்ல தீர்வு தரும். அதனால், சிறுநீரக பிரச்சனை உள்ளவர்கள் வாழை இலையில் சாப்பிடுவதை வழக்கமாக கொண்டால், நிவாரணம் கிடைக்கும்.

**வாழை இலையில் உள்ள குளோரோபில், வயிற்றுப் புண்களை ஆற்றும் தன்மை கொண்டது. தீ உங்களை ஆற்றும் சக்தி கூட வாழை இலைக்கு உண்டு. அல்சர் புண் ஆற்றும் திறன் கொண்ட வாழை இலை, புற்றுநோயை தடுக்கும் ஆற்றல் கொண்டது**





# வர்த்தக வரி விதிப்புக்கான காலக்கெடுவை நீட்டிக்கப்போவதில்லை: - டிரம்ப் தகவல்



அமெரிக்காவில் எந்த நாடுகள் வேண்டுமானாலும் வர்த்தகம் செய்யலாம். ஆனால் அதற்கு 25% அல்லது 30% அல்லது 50௭ அல்லது 10௭ என வரி செலுத்தவேண்டி இருக்கும் என்று கூறியுள்ளார் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப்.

பிற நாடுகள் மீதான வர்த்தக வரி விதிப்புக்கான 90 நாள் காலக்கெடுவை நீட்டிக்கப்போவதில்லை என அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் தெரிவித்திருக்கிறார்.

இரண்டாவது முறை அமெரிக்க ஜனாதிபதியாக பொறுப்பேற்ற முதல் நாளிலேயே வர்த்தக வரி மாற்றம் குறித்து பேச ஆரம்பித்த டிரம்ப், 57 நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிற பொருட்கள் மீது 25வுஐஅநள நேற **Roman** முதல் **50Times New Roman** வரி விதித்து உலக நாடுகளிடையே பதற்றத்தை ஏற்படுத்தினார். இதற்கு எதிர்வினையாற்றிய சீனா மீது 125௭ வரி விதிக்க, அது வர்த்தக போராக பார்க்கப்பட்டது. ஆனால் சீனாவின் அரிய வகை உலோகங்களின் ஏற்றுமதிக்கு அந்நாடு தடை விதிக்கவே, வரியில் சிறு தளர்வை அறிவித்தார் டிரம்ப்.

அமெரிக்கா விதித்திருக்கும் வரி குறித்த ஒப்பந்தங்களில் இந்தியா, சீனா, கனடா உட்பட அனைத்து நாடுகளும் கையெழுத்திடுவது குறித்து பேச்சு வார்த்தை நடத்த, 90 நாட்கள் காலக்கெடுவை விதித்திருந்தார். அந்த கெடுவானது வருகிற ஜுலை 9ஆம் திகதியுடன் முடிவடைகிறது. இந்த கெடுவானது நீட்டிக்கப்படும் என்று வாஷிங்டன் அதிகாரிகள் தரப்பில் சொல்லப்பட்ட நிலையில், அதற்கான அவசியமில்லை என்று பேட்டியளித்திருக்கிறார் டிரம்ப்.

ஜுன் 27ஆம் திகதியன்று அவர் ஃபாக்ஸ் செய்தி சேனலின் 'சண்டே மார்னிங் ஃப்யூச்சர்ஸ்' என்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்.

அப்போது அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தைக்கான காலக்கெடு முடிவுக்கு வருவதாகவும், அமெரிக்காவுடனான ஒப்பந்தத்தில் கையெழுத்திடாவிட்டால் அந்தந்த நாடுகளுக்கு வர்த்தக அபராதங்கள் விதிக்கப்படும் என்றும் தெரிவித்தார். மேலும் காலக்கெடு முடிவடைவதற்கு முன்பே இதுகுறித்த கடிதங்கள் வெளிவரத் தொடங்கும் என்றும் தெரிவித்தார்.

அந்த பேட்டியில், "எந்தெந்த நாடுகள் எங்களிடம் எப்படி நடந்துகொள்கிறது என்பதை பார்ப்போம். குறிப்பாக, நல்லவிதமாக நடந்துகொள்கிறதா அல்லது மோசமாக நடந்துகொள்கிறதா என்பதை பார்த்து அதற்கேற்ப வரியின் அளவையும் நிர்ணயிப்போம்.

அமெரிக்காவில் எந்த நாடுகள் வேண்டுமானாலும் வர்த்தகம் செய்யலாம். ஆனால் அதற்கு 25% அல்லது 30% அல்லது 50% அல்லது **10Times New Roman** என வரி செலுத்தவேண்டி இருக்கும்" என்று தெரிவித்திருக்கிறார்.

குறிப்பாக, 90 நாட்களில் 90 வர்த்தக ஒப்பந்தங்களை எட்டுவதை இலக்காக வைத்து செயல்பட்டு வருவதாக கூறினார். இதனால் 200 நாடுகளிடையே 90 நாட்களில் தனித்தனியாக பேச்சுவார்த்தை நடத்துவதும், தனித்தனி ஒப்பந்தங்களை உருவாக்குவதும் மிகவும் கடினம் என்றும் அவர் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

உலக நாடுகளுடனான வர்த்தகம்தவிர, சீனாவுடனான டிக்டாக் ஒப்பந்தம், மற்ற வணிக உறவுகள் குறித்தும், ஈரான் மீதான தாக்குதல்கள் குறித்தும், அமெரிக்காவில் பிற நாட்டினர் குடியேறுவதும் குறித்தும் தனது கருத்தை அவர் தெரிவித்தார்.

வர்த்த வரியை பொருத்தவரை இந்தியா மீது 26% வரி விதித்திருக்கிறது அமெரிக்கா. ஒப்பந்த பேச்சுவார்த்தைக்கான காலக்கெடு விரைவில் முடிவடையவுள்ள நிலையில், இந்தியா-அமெரிக்க இடையே இதுவரை எந்தவிதமான சமரச பேச்சுவார்த்தைகளோ அல்லது ஒப்பந்த கையெழுத்தோ நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மானியம் இல்லாவிட்டால் எலான் மஸ்க் தென்னாப்பிரிக்கா தான் செல்ல வேண்டும்




அரசின் மானியங்கள் இல்லாவிட்டால் டெஸ்லா சி.இ.ஓ., எலான் மஸ்க், அநேகமாக தென்னாப்பிரிக்கா திரும்பி விடுவார் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் எச்சரித்துள்ளார்.

அமெரிக்க அதிபர் டிரம்ப் கொண்டு வந்திருக்கும் வரி மற்றும் செலவு மசோதாவை உலகின் பெரும் பணக்காரரான எலான் மஸ்க் ஏற்றுக் கொள்ளவில்லை. தொடர்ந்து அந்த மசோதாவுக்கு தமது எதிர்ப்பை அவர் பதிவு செய்து வருகிறார்.

இந்த மசோதா அமெரிக்க செனட் சபையில் நிறைவேற்றப்பட்டு உள்ளது. ஆனால் இதை எலான் மஸ்க் எதிர்த்துள்ளார். இது குறித்து தமது அதிருப்தியை வெளியிட்டு இருந்த அவர், வரலாற்றில் மிக பெரிய கடன் அதிகரிப்புக்கு இந்த மசோதா வழி வகுக்கும்.

பைத்தியக்காரத்தனமான இந்த மசோதா நிறைவேறினால் புதிய கட்சியை தொடங்குவேன் என்று மிரட்டல் விடுத்தார். இந் நிலையில் மஸ்கின் மிரட்டலுக்கு அதிபர் டிரம்ப் பதிலடி கொடுத்துள்ளார். இது குறித்து அவர் தமது சமூக வலைதள பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் அவர், மானியங்கள் நிறுத்தப்பட்டால் எலான் மஸ்க் தென்னாப்பிரிக்காவுக்கு திரும்புவார் என்றார்.

சண்டை முடிந்தது சமாதானம் பிறந்தது: எலான் மஸ்க் சிறந்த மனிதர் என்கிறார் அதிபர் டிரம்ப்

டிரம்ப் மேலும் கூறி இருப்பதாவது

அமெரிக்க அரசிடம் இருந்து மானியங்கள் இல்லாவிட்டால் டெஸ்லா தலைமை அதிகாரி அநேகமாக தென்னாப்பிரிக்காவே திரும்புவார். நான் அதிபராக என்னை வலுவாக ஆதரித்ததற்கு முன்பே மின்சார வாகன ஆணையை கடுமையாக எதிர்த்தவன். இதை மஸ்க் நன்கு அறிவார்.

இனி ராக்கெட் ஏவுதல்கள், செயற்கைக்கோள்கள் அல்லது மின்சார கார்கள் உற்பத்தி இருக்காது. மின்சார கார்கள் பரவாயில்லை. ஆனால் எல்லாரும் ஒன்றாவது வைத்து இருக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தக்கூடாது.

இவ்வாறு அதில் டிரம்ப் கூறி உள்ளார்.

தொழிலதிபரான எலான் மஸ்க் தென்னாப்பிரிக்காவில் பிறந்து, அமெரிக்காவில் குடியேறியவர். அதை குறிப்பிடும் வகையிலே தான் அவர் தென்னாப்பிரிக்கா சென்று விடுவார் என்று டிரம்ப் சூசகமாக தெரிவித்துள்ளார். "(ஐ)



# தாய்லாந்து பிரதமர் ஷினவத்ரா இடைநீக்கம்

தாய்லாந்தின் பிரதமர் பேடோங்டார்ன் ஷினவத்ராவை பதவி நீக்கம் செய்யக் கோரும் வழக்கு நிலுவையில் உள்ள நிலையில், அரசியலமைப்பு நீதிமன்றத்தால் அவர் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

அவரை பதவி நீக்கம் செய்யக் கோரி 36 செனட்டர்கள் தாக்கல் செய்த மனுவை நீதிமன்றம் பரிசீலித்து வரும் நிலையில் இந்த இடைநீக்கம் நடைபெற்றுள்ளது.

கம்போடியாவின் முன்னாள் தலைவர் /ஹன் சென்னுடனான கசிந்த உரையாடல் தொடர்பாக ஷினவத்ரா நேர்மையற்றவர் என்றும் நெறிமுறை தரங்களை மீறியதாகவும் செனட்டர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

அவரது இடைநீக்கத்தைத் தொடர்ந்து, தாய்லாந்து அரசாங்கம் ஒரு துணைப் பிரதமரால் பராமரிக்கப்படும். ஷினவத்ரா மீதான வழக்கு தொடர்பான நீதிமன்றத்தின் தீர்ப்பு இன்னும் நிலுவையில் உள்ளது.

இருப்பினும், சமீபத்திய அமைச்சரவை மாற்றத்திற்குப் பிறகு அவர் புதிய கலாச்சார அமைச்சராகத் தொடர்ந்து பணியாற்றுவார். கசிந்த தொலைபேசி அழைப்பின் பேரில் அவரது கூட்டாளிகள் விலகியதை அடுத்து, தாய்லாந்து மன்னர், செவ்வாயன்று பேடோங்டார்னின் அமைச்சரவை மறுசீரமைப்பை அங்கீகரித்தார்.

கம்போடியாவுடனான எல்லை பதட்டங்களைத் தணிக்கும் நோக்கில் ஜுன் 15 அன்று ஒரு தொலைபேசி அழைப்பிலிருந்து சர்ச்சை வெடித்தது. இந்த அழைப்பின் போது, ஷினவத்ரா ஹன் செனை "மாமா" என்று குறிப்பிட்டார் மற்றும் தாய்லாந்து இராணுவத் தளபதியை விமர்சித்தார், இது இராணுவ ஆதிக்கம் செலுத்தும் நாட்டில் ஒரு எல்லை மீறுவதாகக் கருதப்படுகிறது. அதன் பின்னர் அவர் தனது கருத்துக்களுக்கு மன்னிப்பு கோரியுள்ளார், அவை பேச்சுவார்த்தை தந்திரமாகவே கூறப்பட்டதாகக் கூறினார்.

கசிந்த உரையாடல் பொதுமக்களின் சீற்றத்தைத் தூண்டியது, மேலும் ஷினவத்ராவின் கூட்டணி அரசாங்கத்தை ஆட்டம் காண வைத்தது. தொடர்ந்து தற்போது, கூட்டணியில் உள்ள ஒரு முக்கிய கட்சி விலகி, பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லா வாக்கெடுப்புக்கு அழைப்பு விடுக்க வாய்ப்புள்ளது. இந்த சம்பவத்திற்குப் பிறகு ஆயிரக்கணக்கான போராட்டக்காரர்கள் அவர் பதவி விலக வேண்டும் என்றும் அழைப்பு விடுத்துள்ளனர். "செயல்முறை அதன் போக்கில் செல்ல நான் அனுமதிப்பேன்," என்று திங்களன்று பேடோங்டார்ன் செய்தியாளர்களிடம் கூறினார். பேடோங்டார்ன் ஒரு வருடத்திற்கும் குறைவான காலத்திற்கு முன்பு பதவியேற்றார், ஆனால் கம்போடியா சம்பவம் அவரது நிலையை கடுமையாக பலவீனப்படுத்தியுள்ளது.

தனித்தனியாக, அவரது தந்தை, முன்னாள் பிரதமர் தாக்சின் ஷினாவத்ராவும் சட்ட சிக்கல்களை எதிர்கொள்கிறார். 2015 ஆம் ஆண்டு தென் கொரிய ஊடகத்திற்கு அளித்த பேட்டி தொடர்பாக அரச வம்சாவளி அவதூறு குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ள அவர் நீதிமன்றத்தில் வழக்கை எதிர்கொள்கிறார். தாய்லாந்தின் சக்திவாய்ந்த முடியாட்சியை அவர் அவமதித்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளை மையமாகக் கொண்டது இந்த வழக்கு, குற்றம் நிரூபிக்கப்பட்டால் 15 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படும் கடுமையான குற்றமாகும். அவர் குற்றச்சாட்டுகளை மறுத்து, மகுடத்திற்கு விசுவாசமாக இருப்பதாக உறுதியளித்துள்ளார். (ஐ)

## மீண்டும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"நான் வீடமைப்பு விவகார அமைச்சராக இருந்தபோது விற்பனை செய்யப்பட்ட சில கடைகள் தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காக என்னை அழைத்துள்ளனர்.

அவர்கள் ஒரு திகதியைக் குறிப்பிட்டு அன்றைய தினம் வாக்குமூலத்தைப் பதிவு செய்வதற்காக வருமாறு வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

அன்றைய தினம் எனக்கு வேறு ஒரு வழக்கு உள்ளதால் சமூகமளிக்க முடியாது எனத் தெரிவித்து நான் கடிதம் எழுதியுள்ளேன்.

முன்னர் போல் அவர்கள் என்னைச் சிறையில் அடைத்தால் கிடைக்கின்ற நேரத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்துவேன். கடந்த தடவை அவர்கள் என்னைச் சிறையில் அடைத்த வேளை இரண்டு நூல்களை எழுதி ஐந்து ஓவியங்களை வரைந்தேன். இம்முறை சிறையில் அடைத்தால் அவ்வாறு நூல்களை எழுதுவேன்." - என்றார்.

## போதைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேலும் தெரியவருவதாவது,

கஹவத்த, யாயின்ன பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்குள் நேற்று இரவு 9 மணியளவில் புகுந்த இனந்தெரியாத நால்வர், இளைஞர்கள் இருவரை ஜீப் வாகனத்தில் கொஸ்கெல்ல பிரதேசத்துக்குக் கடத்திச் சென்று அவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டில் 22 வயதுடைய இளைஞர் ஒருவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன் 27 வயதுடைய இளைஞர் ஒருவன் படுகாயமடைந்துள்ளார்.

இதனையடுத்து படுகாயமடைந்த இளைஞன் கஹவத்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், துப்பாக்கிதாரிகள் பிஸ்டல் துப்பாக்கியை பயன்படுத்தித் துப்பாக்கிச்சூட்டை நடத்தியுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் ஏற்பட்ட தகராறு காரணமாக இந்தத் துப்பாக்கிச்சூடு இடம்பெற்றிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இது தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஸ்ரீலங்கன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அத்துடன், நிஷாந்த விக்ரமசிங்கவுக்கு எதிரான வழக்கு மீதான விசாரணைகளை நிறைவு செய்து சாட்சியங்களை எதிர்வரும் 15 ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளுக்கு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

நிஷாந்த விக்கிரமசிங்க, விமானங்கள் கொள்வனவு செய்தமை தொடர்பான விசாரணைகளுக்கு அமைய இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் அண்மையில் கைது செய்யப்பட்ட நிலையில் நீதிமன்ற உத்தரவின் கீழ் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வாக்குறுதிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவிக்கும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பலவீனமான, வினைதிறனற்ற, பொய் சொல்லும், ஏமாற்றும் தற்போதைய அரசு நாட்டு மக்களுக்குப் பெரும் தீங்கு விளைவித்து வருகின்றது. நேற்று திடீரென எரிபொருள்களில் விலை அதிகரிப்பைச் செய்தது.

எரிபொருள் விலையை அதிகரித்த தற்போதைய அரசு, கடந்த தேர்தல் காலங்களில் ஏலவே காணப்படும் எரிபொருள் விலைச்சூத்திரத்தை மாற்றுவோம் எனக் கூறியது. போதாக்குறைக்கு துறைமுகத்தில் இறக்கப்படும் எரிபொருளை அதே விலையில் நுகர்வோருக்கு பெற்றுத் தருவோம் என உரக்கத் தெரிவித்தது. துறைமுகத்தில் ஒரு விலைக்கு இறக்கப்படுகின்றது. பின்னர் பொதுமக்களுக்கு மற்றொரு விலையில் விற்கப்படுகின்றது. ஊழல், மோசடி, திருட்டு மற்றும் இலஞ்சம் போன்றனவையே இதற்குக் காரணம். இவை அனைத்தையும் நிறுத்துவோம், எரிபொருள் மீதான வரிகளை நீக்குவோம். துறைமுகத்தில் இறக்கப்படும் அதே விலையில் எரிபொருளை மக்களுக்கு பெற்றுத் தருவோம் எனத் தற்போதைய ஆளும் தரப்பினர் வாக்குறுதியளித்திருந்தனர். ஆனால், தெளிவான அதிகாரத்தோடு ஆட்சிக்கு வந்த தற்போதைய ஆளும் தரப்பினரால் இன்றளவில் இதில் எதுவும் நடக்கவில்லை.

அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்கும் வழங்கப்படும் கொமிஸ் எடுத்தல் நிறுத்தப்பட்டுள்ளனவா? எரிபொருள்கள் மீதான வரிச்சுமைகள் நீக்கப்பட்டுள்ளனவா? என்பன குறித்து நாம் இந்த அரசிடமிருந்து தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது.

துறைமுகத்தில் இறக்கப்படும் அதே விலையில் நுகர்வோருக்கு தற்போது எரிபொருள் வழங்கப்படுகின்றனவா என்பது குறித்தும் நாம் இந்த அரசிடமிருந்து தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது.

ஐ.எம்.எவ்வின் 4 ஆவது தவணையைப் பெறுவதற்கான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் விதமாகவே இந்த அரசு இவ்வாறு செயற்பட்டு வருகின்றது.

எரிபொருள் விலைச் சூத்திரத்தை மாற்றி அதை மேலும் மக்களுக்கு சாதகமான ஒன்றாக மாற்றியமைப்போம் என்று பிரஸ்தாபித்தவர்கள் இன்றும் கூட முந்தைய அரசின் எரிபொருள் விலை சூத்திரத்தையே பின்பற்றுகின்றார்கள். எரிபொருள் விலையேற்றம் செய்யப்பட்டதன் அடிப்படையை நாம் தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது.

மருந்துகள் மற்றும் உபகரணங்களுக்குத் தற்போது தட்டுப்பாடு நிலவுகின்றமை. உயிர்களைக் காக்கத் தேவையான உபகரணங்கள் போதுமானதாக இல்லை என்று இதற்கு முன்னர் பல தடவை எதிர்க்கட்சி சுட்டிக்காட்டியது. சில உபகரணங்கள் பழுதடைந்துள்ளன. கொழும்பு தேசிய வைத்தியசாலையில் காணப்படும் எம். ஆர். ஐ. ஸ்கேனிங் இயந்திரம் தற்போது செயலிழந்துள்ளது. நோய்வாய்ப்பட்டவர்கள் இந்தப் பரிசோதனை நடவடிக்கையை வெளியில் செய்ய வேண்டி வந்திருக்கின்றது.

மருந்துகள் மற்றும் உபகரணங்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றமை குறித்து எதிர்க்கட்சி கேள்வி எழுப்பிய சந்தர்ப்பங்களில் பல்வேறு விதமான பதில்கள் தெரிவிக்கப்பட்டு, ஆளும் தரப்பினர் எம் மீது பல குற்றச்சாட்டுகளையும் முன்வைத்தனர். பொய் சொல்லும் ஏமாற்றும் இந்த அரசின் இலவச சுகாதாரக் கொள்கை இவ்வாறே அமைந்து காணப்படுகின்றது.

நாட்டில் கொலைச் சம்பவங்களும் அவ்வாறு காணப்படுகின்றன. கொலை கலாசாரம் தொடர்ந்து வருகின்றது. அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரிகள், குண்டர்கள் மற்றும் பாதாள உலகக் கும்பல்களால் துப்பாக்கிச்சூடுகளும் கொலைகளும் நடத்தப்பட்டு வருகின்றன. இதனால் நாடு முழுவதும் உயிர் இழப்புகள் ஏற்பட்டு வருகின்றன. சட்டம் ஒழுங்கை நிலைநாட்டத் தேவையான எந்த வேலைத்திட்டமும் இந்த அரசிடம் இல்லையா?" - என்று எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி எழுப்பினார்.

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இனவாதத்தை நிராகரித்து தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்பப்பாடுபட வேண்டும் என்றும், அனைவருக்கும் ஜனநாயக ரீதியாகவும் சுதந்திரமாகவும் செயற்படும் திறன் இருந்தாலும், இனவாதம் மீண்டும் ஒருபோதும் தலைதூக்க அனுமதிக்கப் போவதில்லை என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

எனவே, இனவாதத்தை நிராகரித்து தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்கு சட்டங்கள் போதுமானதாக இல்லாவிட்டால், சட்டங்கள் பலப்படுத்தப்பட்டு இனவாதம் தோற்கடிக்கப்படும் என்றும், சிங்களவர்கள், தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் அனைவரும் ஒன்றாக வாழும் ஒரு சமூகத்தை உருவாக்குவதே தனது அரசின் நோக்கம் எனவும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார்.



# அபராதத் தொகையை ஒன்லைனில் செலுத்த அனுமதி

போக்குவரத்து அபராதத்தை ஒன்லைனில் செலுத்தும் திட்டத்தை நாடு முழுவதும் செயல்படுத்த அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

கொட்டாவை அதிவேக நெடுஞ்சாலை நுழைவாயிலுக்கு அருகில் நடைபெற்ற நிகழ்ச்சிக்குப் பிறகு ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இதை கூறினார்.

"இப்போது அபராதம் செலுத்துவது எளிதாக்கப்பட்டுள்ளது. இதற்கு இன்று அமைச்சரவை அனுமதி அளித்தது.

தற்போது, குருநாகல் முதல் அனுராதபுரம் வரை மட்டுமே தொலைபேசி மூலம் அபராதம் செலுத்த முடியும்.

இலங்கையில் உள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் இப்போது தொலைபேசிகளை வழங்கி வருகிறோம். இந்த ஆண்டு முதல், எங்கிருந்தும் அபராதம் செலுத்தலாம்" என்றார். (ஐ)



# இராமேஸ்வர மீனவர்கள் 7 பேருக்கு விளக்கமறியல்

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து படகு ஒன்றில் மீன்பிடியில் ஈடுபட்ட நிலையில் கைது செய்யப்பட்ட 07 இராமேஸ்வர மீனவர்களையும் எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதவான் செவ்வாய்க்கிழமை (1) மாலை உத்தரவிட்டார்.

இராமேஸ்வரம் துறைமுகத்தில் இருந்து திங்கட்கிழமை(30) அன்று மீன்பிடிக்க சென்ற ஏழு மீனவர்கள் திங்கட்கிழமை இரவு எல்லை தாண்டி மீன்பிடித்த நிலையில் இலங்கை கடல் பகுதியில் வைத்து கடற்படையினர் கைது செய்து தலைமன்னார் கடற்படை முகாமுக்கு அழைத்துச் சென்றனர்.

தலைமன்னார் கடற்படையினர் விசாரணைகளின் பின்னர் குறித்த மீனவர்களை செவ்வாய்க்கிழமை(1) மதியம் மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளின் பின்னர் செவ்வாய்க்கிழமை (1) மாலை குறித்த மீனவர்களை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினர்.

இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் குறித்த 07 மீனவர்களையும் எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (ஐ)

# அடைக்கலநாதன் உட்பட்ட குழு, சாய் முரளியுடன் சந்திப்பு



இலங்கைக்கான இந்திய துணை உயர்ஸ்தானிகர் சாய் முரளியை தமிழீழ விடுதலை இயக்கம் ரெலோ சார்பாக கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையிலான குழுவினர் செவ்வாய்க்கிழமை (1) காலை யாழ்ப்பாணத்தில் உள்ள துணைத்தூதுவராலயத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

குறித்த கலந்துரையாடலில் மன்னார் நகர முதல்வர் டானியல் வசந்தன், மாந்தை மேற்கு பிரதேச சபை தவிசாளர் ஞானப்பிரகாசம் பிரேம் குமார்,வலி கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ், மன்னார் நகர சபை உறுப்பினர் செபமாலை ஆரோக்கியநாதன் பிகிறாடோ ,மன்னார் பிரதேச சபை உறுப்பினர் றொயிட்டன் சாந்தினி குரூஸ் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

குறித்த சந்திப்பின் போது பல்வேறு விடையங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது. குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்தல்,பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்தல்,காங்கேசன்துறையில் கப்பல் கட்டுவதற்கு சிறிய நிலையம் ஒன்றை அமைத்தல் ,மன்னாரில் நவீன முறையில் விளையாட்டு மைதானம் அமைத்தல்,மாந்தை மேற்கில் உள்ளக விளையாட்டு மைதானம் ஒன்றை அமைத்தல்,மன்னார் பிரதேச சபை பிரிவில் சுற்றுலாத்துறையை மேம்படுத்த தேவையான உதவிகள் போன்றவற்றை ஏற்படுத்தி தருமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இதன் போது தாங்கள் முன் வைத்த கோரிக்கைகள் மற்றும் வேண்டுகோளை இலங்கைக்கான இந்திய துணை உயர்ஸ்தானிகர் சாய் முரளி ஏற்றுக் கொண்டுள்ளதாக மன்னார் நகர முதல்வர் டானியல் வசந்தன் தெரிவித்தார். (ஐ)








இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.07.2025 வெளியிடப்பெற்றது.